**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 73 of 2023

Depositions of PW - 2 witness for ________ Prosecution / Defence / Court

Name : தினேஷ்பாபு

Father's Name : தங்கவேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of November** 2025.

**(1ம் எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார். 2ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் மலையூர் கிராமத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எதிரி சரவணகுமார் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். எதிரி அமிர்தராஜ் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சரவணகுமார் அவர்களிடமிருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். எதிரி அமிர்தராஜ் அவர்களிடமிருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான்.

2. கடந்த 13.04.2022ம் தேதியன்று மதியம் சுமார் 12.30 முதல் 01.00 மணிக்குள்ளாக நானும் எனது நண்பர் இளங்கோ என்பவரும் கருமத்தம்பட்டியில் இருந்து நீலாம்பூர் செல்லும் சாலையில் செங்கோட்டம் புதூர் என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த பொழுது போலீசார் எதிரிகள் சரவணகுமார் மற்றும் அமிர்தராஜ் இருவரையும் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இருவரும் நின்று பார்த்த பொழுது எதிரிகள் இருவரும் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். எதிரி சரவணகுமார் முதலில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அவர் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த MOTO செல்போனை போலீசார் கைப்பற்றுதல் மகசலில் கைப்பற்றினார்கள்.

3. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.3** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி அமிர்தராஜ் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்து அவர் ஆஜர் செய்த பல்சர் பைக்கை கைப்பற்றுதல் தயார் செய்து கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4** குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.5** குறியீடு செய்யப்படுகிறது. இருசக்கர வாகனத்தின் பதிவு எண் PULSAR BLACK COLOUR TN 37 BD 1764 ஆகும். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். ( ஒன்றாம் எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்த வருகிறார், இரண்டாம் எதிரி இன்று ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனத்தை தான் போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். புகைப்படம் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**ஒன்று மற்றும் இரண்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. **நானும் எனது நண்பர் இளங்கோவனும் எதற்காக அவ்வழியாக சென்றோம் என்றால் பகுதி நேர வேலை கேட்பதற்காக சென்றோம்**. மேற்சொன்ன விபரத்தை போலீசார் என்னை விசாரித்த பொழுது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சென்ற பொழுது எத்தனை போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் ஐந்து போலீசார் இருந்தார்கள். போலீசார் மேற்படி இடத்தில் தட்டச்சு செய்வதற்கு மடிக்கணினி வைத்திருந்தார்களா என்றால் மடிக்கணினி வைத்திருந்தார்கள். போலீசார் எதிரிகளை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திலேயே மடிக்கணினியில்

தட்டச்சு செய்தார்கள்.

2. மடிக்கணினியில் எதிரிகளைப் பிடித்த இடத்தில் விசாரித்து பதிவு செய்து காவல் நிலையம் வந்து பிரிண்ட் எடுத்து காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன். நான் ஒப்புதல் வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் நான்கு கையொப்பம் செய்தேன். என்னை காவல் நிலையம் அழைத்து கையொப்பம் வாங்கியதற்கு பின்னிட்டு எப்பொழுதாவது அழைத்து விசாரித்தார்களா என்றால் மீண்டும் அழைத்து விசாரித்தார்கள். எதிரிகளைப் பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாக எதிரிகளைப் பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு இரு திசைகளிலும் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரிகளைப் பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்தில் அருகே நிறைய கடைகள் உள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை பிடித்ததாக சொல்லப்படும் இடத்தில் எந்த கடைகளும் இல்லை.

3. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் இருபுறங்களிலும் பேருந்து நிறுத்தம் இல்லை என்றும் சம்பவ இடத்தில் அருகில் மூன்று டீக்கடைகள் உள்ளது என்றும் நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யாததால் தான் சம்பவ இடத்தில் இருந்த கடைகள் குறித்து எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளைப் பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு இருபுறங்களிலும் பேருந்து நிறுத்தம் இல்லை என்றும் நான் பேருந்து நிறுத்தம் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் மற்றும் எனது நண்பர் இருவரும் காவல் நிலையம் சென்று போலீசார் கேட்டுக் கொண்டதற்கு எனது கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது சம்பவ இடத்தில் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகளிடமிருந்து செல்போன் மற்றும் பல்சர் வாகனம் கைப்பற்றப்படவில்லை என்றும் காவல் நிலையத்தில் போலீசார் தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.10 18:54:52 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**